ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2427/02 - 2025 මාර්තු මස 10 වැනි සඳුදා - 2025.03.10

2427/02 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 10ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2025 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்**

3 ஆம் பிரிவின் கீழான உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டம் (262 ஆம் அத்தியாயம்)

**26 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்**

2025 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டம் (262 ஆம் அத்தியாயம்) 26 ஆம் பிரிவின் பிரகாரம், தேர்தல் ஆணைக்குழுவிற்குக் கையளிக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கு அமைவாக, இங்குள்ள அட்டவணையில் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள நிருவாக மாவட்டத்தினுள் அமையப் பெற்றுள்ளதும் மற்றும் அவ்வட்டணையில் II ஆம் நிரலின் நேரொத்த குறிப்பில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு உள்ளூரதிகார சபைக்கும் உரியவாறு ஒவ்வொரு நிருவாக மாவட்டத்திலுமுள்ள உள்ளூரதிகார சபைகளின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து நியமிப்பதற்குரிய பெயர்குறித்த நியமனங்களுக்கான அறிவித்தல் 2025, மாச்சு மாதம் 10 ஆந் திகதி வெளியிடப்படுகிறது.

பெயர்குறித்த நியமனங்களுக்கான அறிவித்தல் வெளியிடப்படுகின்ற தினத்திற்கு அடுத்த நாள் தொடக்கம், பெயர்குறித்த நியமனப் பத்திரங்களைக் கையேற்கும் இறுதி நாளுக்கு முந்திய தினம் வரை, அதாவது 2025.03.26 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரையான காலப்பகுதியினுள் (இக்காலப்பகுதியினுள் அமைந்துள்ள 2025.03.13 ஆம் போயா தினம், மற்றும் 2025.03.15, 2025.03.16 மற்றும் 2025.03.22, 2025.03.23 ஆகிய சனி, ஞாயிறு தினங்களில் வைப்புப் பணம் கையேற்கப்பட மாட்டாது) உரியவாறு தெரிவத்தாட்சி அலுவலரால் வைப்புப் பணம் கையேற்கப்படுவதுடன், 2025.03.24 ஆம் திகதி தொடக்கம் 2025.03.27 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை அலுவலக நேரத்தினுள் பெயர்குறித்த நியமனப் பத்திரங்கள் கையேற்கப்படுமென இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

**ஆர். எம். ஏ. எல். ரத்நாயக்க**,
தவிசாளர்,
தேர்தல் ஆணைக்குழு.

**எம். ஏ. பீ. சி. பெரேரா**,
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

**அமீர் பாயிஸ்**,
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

**ஏ. சண்முகநாதன்**,
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

பேராசிரியர் **லக்ஷ்மன் திசாநாயக்க**,
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

தேர்தல்கள் ஆணைக்குழு,
இராஜகிரிய,
சரண மாவத்தை,
2025, மாச்சு 10.

1A - G 43958 — 29 (2025/03)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

| *நிரல் I* | *நிரல் II* |
|---|---|
| *நிருவாக மாவட்டம்* | *உள்ளூரதிகார சபையின் பெயர்* |
| **கிளிநொச்சி** | பூநகரி பிரதேச சபை |
| **மன்னார்** | மன்னார் பிரதேச சபை |
| **அம்பாறை** | தெஹியத்தகண்டிய பிரதேச சபை |

EOG *03 - 0118*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.